[1970 செப்டம்பர் 5

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இது நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

திரு. கே. விநயகம்: நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கைப்பற்றி கேள்வி போடப்போவதில்லை. ஆயினும் இப்படி ஒரு கோவிலுக்கு அறங்காவலர்களைப் போடும்போது ஒருசிலரையே போடவேண்டும் என்பது என்ன? கிட்டத்தட்ட ஏழு பேர்களைப் போடலாம் என்று இருக்கிறது. தெய்வ பக்தி உள்ளவர்களை பரவலாகப் போடுவதனல் கோவில்களில் பொதுமக்களுக்கு அதிக அக்கறை ஏற்பட வாய்ப்பு இராதா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: நான் இப்போதிருக்கிற நிலைமையைச் சொன்னேன். இனிமேல் செய்யவேண்டியதைப்பற்றி உறுப்பினர் குறிப்பிடுகிறார். அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யப் பட்டே போடப்படும்.

DR. H. V. HANDE: Sir, will the Hon. Minister tell us, which Kandaswami Temple he is referring to? There are two Kandaswami temples in the City, one in the Mint Street and another in Park Town. Will the Hon. Minister also tell us whether they have a policy of appointing only those persons who are interested in these activities and who are fostering these activities, as trustees of temples and whether the persons who have absolutely no connection with these temples and who have no interest in these temples, are also recommended as trustees? What is the exact attitude taken by the Ministry in connection with the appointment of trustees and will the Hon. Minister explain it clearly to this House?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: ஒரு அறங்காவலருக்கு இருக்கவேண்டிய தகுதிகள் என்ன, என்ன என்று சட்டப்படி வரையறுத்திருக்கிறோம். முழு விவரமும் இப்போது என்னிடம் இல்லை. என்றாலும் யாருக்கு இந்து மதத்தில் நம்பிக்கை இருக்கிறதோ அவரே அறங்காவலராகப் போடப்படுவார்கள். மேலும் 25 வயதிற்குக் குறையாமல் 70 வயதுக்கு மேலே போகாமல் இருக்கவேண்டும். சித்த சுவாதீனம் உள்ளவராக, கூன், குருடு, செவிடு இல்லாதவராக, கிரிமினல் குற்றத்திற்காக தண்டனை அடையாதவராக, கோவில் நிலங்களை, சொத்துக்களை குத்தகை எடுக்காதவராக எல்லாம் இருக்க வேண்டும்.

ஸ்ரீ இராமேஸ்வரம் கோயில் திருப்பணி

*258 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இம்மாநிலத்திலுள்ள ஸ்ரீ இராமேசுவரம் கோயில் திருப்பணி களுக்காக "யுனெஸ்கோ"விடம் நிதியுதவி ஏதும் கேட்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: ஆம். இராமேஸ்வரத்தி லுள்ள ஸ்ரீ இராமநாதசுவாமி கோவில் "யுனெஸ்கோ" நிறுவனத் தால் உதவி அளிக்கப்படுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டாவது கோவிலாகும்.

1970 செப்டம்பர் 5]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இராமேசுவரம் கோவில் இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது என்றால் முதல் கோவில் எது? இந்தக் கோவிலுக்கு யுனெஸ்கோவில் இருந்து எவ்வளவு பணம் கேட்கப்பட்டிருக்கிறது, அவர்கள் எவ்வளவு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்? அந்த வேலை எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கான வேலை நடைபெற்று வருகிறது. அதற்கு அடுத்ததுதான் இந்த இராமேசுவரம் கோவில். 12 ஆயிரம் டாலர் ஆண்டு ஒன்றுக்குக் கொடுக்கிறார்கள் ரொக்கமாகக் கொடுப்பதில்லை.

'Materials which are not readily available in India are supplied by UNESCO'

என்பதாக இது சம்பந்தமாக யோசனை சொல்லக்கூடியது, இன்னும் புத்தகங்கள் அச்சிட்டு கொடுப்பது ஆகிய வகையில் உதவி செய்கிறது. மூன்றாவது கோவில் காஞ்சீபுரம் வரதராஜர், நான்காவதாக சிதம்பரம் கோவில் இப்படி 10 ஆண்டுகளுக்கு பத்து கோவில்களை எடுத்து உதவி செய்ய யோசனை கூறப்பட்டு ஏற்கப் பட்டிருக்கிறது.

மதுரையில் வானொலி நிலையம்

*231 வினா—திரு. பி. எஸ். மணியன் :

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் வானொலி நிலையம் ஏற்படுத்தும் முயற்சி அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம். மதுரையில் வானொலி நிலையம் அமைக்கக் கோரி மத்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

திரு. பி. எஸ். மணியம் : மதுரையை மையமாக வைத்து மாவட்ட மக்கள் பல கோரிக்கைகளை அரசிடம் வைக்கிறார்கள். அரசும் நிறை வேற்றி வருகிறது. மதுரை–இராமநாதபுரம் வர்த்தக சபை வர்த்த கத்தைப் பெருக்க மதுரையில் ஒரு வானொலி நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்கிறார்கள். அதை கவனித்து அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் இதில் எவ்வளவு அக்கறையோடு இந்தத் பிரச்னையை அணுகுகிறாரோ, அதைப்போலவே இந்த அரசும் இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் மத்திய சர்க்காருக்குக் கடிதம் மூலமாக வேண்டுகோள் விடுத் திருக்கிறது. வானொலி நிலையம் ஏற்படுத்துவதில் இன்னமும் பின் தங்கிய நிலையில் உள்ள பகுதிகளின் தேவை கவனிக்கப்பட்ட பிறகு இதுவும் கவனிக்கப்படும் என்று மத்திய அரசிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது. என்றாலும் அண்மையில் மீண்டும் இதைப்பற்றிக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.